# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302*

## ஜெபம்

**முன்னுரை :**

கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் ஜெபத்தினுடைய மதிப்பை எந்த விதத்திலும் குறைத்து மதிப்பிடக்கூடாது. இது பரலோகத்தின் பொக்கிஷக் கதவுகளை திறக்கக்கூடிய திறவுகோலாய் இருக்கிறது. இது நம்முடைய ஆத்துமாக்களில் தேவனை கிரியை செய்ய வைக்கிறதாய் இருக்கிறது. இது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை கட்டவிழ்த்து வேதாகமத்தை நம்முடைய எலும்புகளில் எரிகிற நெருப்பாகவும், கிறிஸ்துவின் பிரசன்னத்தை துடிப்புமிக்க உண்மையாகவும் மாற்றுகிறது. ஜெபம் நம்முடைய ஆவியை தாழ்மைப்படுத்துகிறது. சத்தியத்திற்கு நம்முடைய கண்களை திறக்கிறது. அதோடு தேவனுடைய சித்தத்தைக் கண்டு கொண்டு அதிலே நம்மை நடக்கச் செய்கிறது. இது மலைகளை பெயர்த்து அகற்றுவது மட்டுமல்ல, துணிவை பெலப்படுத்துகிறது. இதன் மூலம் நம்முடைய கவலைகளை தேவன்மேல் போட்டுவிடுகிறோம். சாத்தானோடும், பாவத்தோடும் உள்ள கடுமையான போராட்டத்தை எதிர்ப்பதற்கு தேவகிருபையும் பெறுகிறோம். ஜெபிப்பதற்கு தவறின ஒருவனுடைய நஷ்டத்தை கணக்கிடும்போது அது திகில் அடையச் செய்யக்கூடியதாய் இருக்கிறது. இந்தப் பாடத்தைப் படிக்கிற எல்லோரும் ஜெப வாழ்க்கைக்குத் தங்களைத் தொடர்ந்து ஒப்புக்கொடுத்து ஜெபத்தின் நோக்கத்தையும், வல்லமையையும் தாங்களே அறிந்துகொள்ள வேண்டும் என்பதே என்னுடைய இருதயத்தின் வாஞ்சையாய் இருக்கிறது.

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

விசுவாசமுள்ள ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுக்க சித்தமுள்ளவராய் இருப்பாரேயானால் (மாற்கு 11:24) ஜெபிக்காமல் இருப்பது மிகப் பெரிய பாவமாக மாறுகிறது (1 சாமு. 12:23). ஜெபம் தேவனுடைய வல்லமையை கட்டவிழ்க்கிறதாயும், கிறிஸ்துவை வாழ்க்கையில் அனுபவமாக்குகிறதாயும், அலைகளைத்திருப்புகிறதாயும், சூழ்நிலைகளை மாற்றுகிறதாயும், அதோடு கிறிஸ்தவனின் வாழ்க்கை இயந்திரத்தை இயங்கச் செய்கிறதாயும் இருக்குமேயானால், எப்படி ஜெபிப்பது என்பதைக் கற்றுக் கொள்வது மிகவும் அவசியமானதாய் இருக்கிறது. இதனால் இந்தப் பாடத்தைப் படிக்கிற எல்லோரும் ஜெபத்தினுடைய தன்மையையும், கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் ஜெபத்தினுடைய நோக்கத்தையும், ஜெபத்தை சரியான முறையில் பயன்படுத்துவதினால் வரும் அதிக வல்லமையையும் போதிப்பதே இப்பாடத்தின் குறிக்கோள். ஆவிக்குரிய ஆசீர்வாதத்தின் ஊற்றுகளை திறக்கக்கூடிய நிலையான, பலன் தரக்கூடிய ஜெப வாழ்க்கைக்கு இந்தப் பாடம் உங்களை ஊக்குவிப்பதாக.

**பாடம்**

## I. நாம் ஜெபிக்க கட்டளை பெற்றிருக்கிறோம் :

ஜெபம் என்பது ஒரு கிறிஸ்தவன் கடைபிடிக்கவும் செய்யலாம் அல்லது விட்டுவிடவும் செய்யலாம் என்ற எண்ணம் கொள்ளக் கூடியது அல்ல. நாம் ஜெபிக்க கட்டளை பெற்றிருக்கிறோம். நாம் எல்லோரும் சரீரத்திலே பெலவீனராய் இருக்கிறபடியினாலே ஜெபிக்க கவனக்குறைவுள்ளவர்களாய் இருக்கிறோம். ஆகையால் தேவன் கிறிஸ்தவனின் நிலையான வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் நம்மை ஜெபிக்க கட்டளையிட்டிருக்கிறார்.

**1. பழைய ஏற்பாட்டின் உதாரணங்கள் :**

1. ஏசாயா 55:6 – "கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்; அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்."
2. சாலொமோனுக்கு தேவன், (2 நாளாகமம் 7:14) – "என் ஜனங்கள் . . . ஜெபம்பண்ணினால் . . . பரலோகத்திலிருந்து நான் கேட்பேன் . . ." எனக் கூறியிருக்கிறார்.
3. சாமுவேல் (1 சாமுவேல் 12:23) – "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவனாய் இருப்பேன்."
4. சங்கீதக்காரனாகிய தாவீது (சங்கீதம் 55:17) – "அந்தி சந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம் பண்ணி முறையிடுவேன் . . ."

2. புதிய ஏற்பாட்டின் உதாரணங்கள் :

1. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து (லூக்கா 18:1), ''சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும் . . .'' இதோடு மத்தேயு 7:7; 26:41, யோவான் 16:24 ஆகிய வசனங்களையும் வாசிக்கவும்.
2. அப்போஸ்தலனாகிய பவுல் – 1 தெசலோனிக்கேயர் 5:17, ''இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.'' எபேசியர் 6:18, ''எந்த சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி . . .'' ரோமர் 12:12; 15:32, பிலிப்பியர் 4:6,7, 1 தீமோத்தேயு 2:1, கொலோசெயர் 4:2.
3. அப்போஸ்தலனாகிய யாக்கோபு – (யாக்கோபு 4:2), ''. . . நீங்கள் விண்ணப்பம் பண்ணாமல் இருக்கிறதினாலே, உங்களுக்கு சித்திக்கிறதில்லை'' (யாக்கோபு 1:5; 5:16, 17).

## II. ஜெபம் பண்ண தவறுதலாகிய பாவம் :

ஜெபம் விசுவாசியினாலே புறக்கணிக்கப்படக்கூடிய காரியமல்ல அல்லது விசுவாசி அதோடு சம்பந்தம் இல்லாதவர் போல நடந்துகொள்ளக்கூடிய காரியமுமல்ல. அதோடு நாம் இடைவிடாமல், ஊக்கமாக ஜெபிக்க கட்டளை பெற்றிருக்கிறோம். அதனாலே ஜெபிக்காமலிருப்பது பயங்கரமான பாவமாக மாறுகிறது.

**1. இது கீழ்ப்படியாமையின் பாவம் :**

ஜெபிக்காத கிறிஸ்தவன் கீழ்ப்படியாத கிறிஸ்தவனாய் இருக்கிறான். அவன் ஆண்டவருடைய கட்டளையை புறக்கணிக்கிறவனும், தன்னுடைய ஆத்துமாவுக்கு கிடைக்கக்கூடிய அத்தியாவசிய ஆவிக்குரிய உணவை இழந்து விடுகிறவனுமாயிருக்கிறான்.

**2. இது ஆண்டவருக்கு நேர் விரோதமான பாவம் – 1 சாமுவேல் 12:23 :**

தேவன் விசுவாசிகளினுடைய ஜெபத்திற்கு பதில் அளிக்க விரும்புகிறபடியினாலே ஜெபிக்காமல் இருப்பது அவருடைய கரத்தைக் கட்டுவதும், அவருடைய வல்லமையை செயல்படுத்தவிடாமல் தடுக்கிறதுமாய் இருக்கிறது.

**3. இது தேவனுடைய சபைக்கு விரோதமான பாவம் :**

எபேசியர் 6:18, ''சகல பரிசுத்தவான்களுக்காகவும் . . . . எப்பொழுதும் ஜெபம்பண்ணுங்கள்.'' ஜெபம் இல்லாமை தேவனுடைய கரத்தைக் கட்டுவதும் அவருடைய வல்லமையைத் தடுக்கிறதாயும் இருக்கிறது. மட்டுமல்லாமல், தேவன் அவருடைய சபையின்மேல் பொழியக்கூடிய அவருடைய மகிமையான இரக்கத்தையும், வல்லமையையும் இல்லாமல் ஆக்குகிறது.

**4. இது மனிதகுலத்திற்கு விரோமான பாவம் :**

1 தீமோத்தேயு 2:1, ''நான் பிரதானமாய் சொல்லுகிற புத்தி . . . எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் பண்ண வேண்டும்.'' உதாரணமாக, பரிசுத்தவான்களின் உதடுகளிலிருந்து நமது தேசத்திற்காகவும், தலைவர்களுக் காகவும் தினமும் தேவனுடைய சிங்காசனத்திற்கு ஏறெடுக்கப்படும் அநேக ஜெபங்களினால் தேசத்தின்மேல் வரக்கூடிய ஆசீர்வாதங்களை யாரால் அளவிட முடியும்? ''ஆண்டவரே 'அதிகாரத்தில் உள்ள அனைவருக்காகவும்' தினமும் ஜெபிக்க எங்களுக்கு உதவி செய்யும்.''

**5. இது தனக்கே விரோதமான பாவம் :**

யாக்கோபு 4:2, ''நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே உங்களுக்கு சித்திக்கிறதில்லை.'' ஜெபிக்கத் தவறும் மனிதனுக்கு ஏற்படும் பயங்கரமான நஷ்டத்தை யார் விவரித்துக் கூற முடியும்? விசுவாசியின் வாழ்க்கையின் எல்லா வெறுமைக்கும், எல்லாத் தோல்விக்கும் எல்லா பாவத்திற்கும், நேரடிக் காரணம் ஜெபத்தைப் புறக்கணிப்பதே.

**6. இது அவிசுவாசமாகிய பாவம் :**

ஜெபம் இல்லாமை வெறும் புறக்கணிப்பினால் மட்டுமல்ல, மன்னிக்கமுடியாத சந்தேகத்தினாலும் உருவாகிறது. மாற்கு 11:23, 24 ''. . . தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் . . . நீங்கள் ஜெபம்பண்ணும்போது . . .'' விசுவாசம் நம்மை ஜெபிக்க இழுக்கிறது. சந்தேகம் நம்மை அதிலிருந்து விரட்டுகிறது. விசுவாசம் தேவனை உண்மையாக காட்டுகிறது. சந்தேகம் அவருடைய வல்லமையையும், ஆற்றலையும் கேள்வி கேட்கிறது. விசுவாசம் வாழ்க்கையை செழிப்பாக்குகிறது. சந்தேகம் தேவையான ஆசீர்வாதங்களை இழக்கிறதாக இருக்கிறது.

## III. ஜெபத்தின் தன்மை :

கீழே கொடுக்கப்பட்டுள்ள அநேக கருத்துக்கள் அநேக ஆண்டுகளாக தேவனுடைய பணியில் நடைமுறையாகப் பின்பற்றின என்னுடைய சொந்த அனுபவமாகும்.

A. ஜெபம் என்பது தேவனுக்கும், விசுவாசிக்கும் இடையேயுள்ள தொடர்பு ஆகும். இந்தத் தொடர்பு சத்தமாகவோ, சத்தம் இல்லாமலோ அவருடன் விசுவாசிகள் தொடர்பு கொள்வதைக் குறிப்பிடுகிறது.

B. ஜெபம் சிறு தொழுகையாக ஆரம்பித்து பின்ப பெரிய அளவிலே உருவெடுக்கிறது. தொழுகை செய்யும்பொழுது நம்முடைய இருதயத்தின் எண்ணங்களை தேவனுக்கு தெரிவிக்கிறோம். ஆனால் நாம் தொடர்ந்து ஜெபிக்கும் பொழுது தேவனை நம்முடைய வாழ்க்கையிலே எந்த நேரத்திலும் அறியாத அளவிற்கு அதிசயமாகவும், தெளிவாகவும் அறிய ஆரம்பிக்கிறோம்.

C. ஜெபம் என்பது பரலோகத்தின் ஆசீர்வாதங்களை பெறுவதற்கான கதறல் ஆகும். "ஜெபத்தைக் கேட்கிறவரே மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்" என்று சங்கீதம் 65:2 கூறுகிறது. தெய்வீகத் தலையீடுக்காக பூமியிலிருந்து ஏறெடுக்கப்படும் கதறல்களைக் கேட்காமல் இருக்க தேவனின் செவி மந்தமானதல்ல.

D. ஜெபம் என்பது மூடுதிரையை விலக்குவது போன்றதாகும். நம்முடைய இருதயத்திரையை விலக்கி நம்முடைய தேவைகளின் ஆழங்களை அவருக்குக் காண்பிக்கும் பொழுது அவர் எப்பொழுதும் வெளிப்படுத்தாவண்ணம் அவருடைய அன்பையும், கிருபையையும், ஞானத்தையும், வல்லமையையும் நமக்கு வெளிப்படுத்துவார்.

E. ஜெபம் என்பது இல்லை என்ற பதிலை ஏற்க விரும்பாத சிறு குழந்தை தன்னுடைய விருப்பத்தை விடாப்பிடியாக வெளிப்படுத்துவது போன்றதாகும்.

F. ஜெபம் என்பது தேவனுடைய வார்த்தையை கொளுத்தி நமக்குள்ளே கொழுந்துவிடச் செய்யும் தீக்குச்சியைப் போன்றது. பரலோக பொக்கிஷ கதவுகளை திறக்கிற சாவியைப் போன்றது. தெய்வீக ஆசீர்வாதம் பாய்ந்து வரும்படியாக கதவுகளைத் திறக்கச் செய்யக்கூடிய சக்தியாக இருக்கிறது.

G. ஜெபம் என்பது இருபுறமும் செல்லக்கூடிய சாலையாக இருக்கிறது. நாம் தேவனோடு பேசுவது மட்டும் அல்ல, அவர் பேசுவதை கேட்க கவனித்துக் காத்திருக்கவும் செய்கிறது.

## IV. ஜெபத்தின் குணாதிசயங்கள் :

விசுவாசிக்கும், தேவனுக்கும் உள்ள தொடர்பு ஐந்து வழிகளில் சொல்லப்பட்டிருக்கிறது : துதித்தல், விண்ணப்பித்தல், பரிந்து பேசுதல், ஸ்தோத்தரித்தல், வேண்டுதல் செய்தல் ஆகியவைகள் (பிலிப்பியர் 4:6,7, எபேசியர் 6:18, 1 தீமோத்தேயு 2:1).

### 1. துதித்தல் :

அடிப்படையிலே துதித்தல் என்பது சத்தமாக நம்முடைய அன்பை தேவனுக்கு ஸ்தோத்திரத்தினாலே தெரிவிப்பதாகும்.

1. சங்கீதம் 100:4 – "அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து . . ."
2. எபிரெயர் 13:15 – "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்கு செலுத்தக்கடவோம்."

### 2. விண்ணப்பித்தல் :

இதற்குரிய கிரேக்க பதம் டிசிஸ் (deesis) – தேவை என்பதைக் குறிக்கக்கூடியது. இது எப்பொழுதும் தேவனிடத்தில் கேட்கப்படும் ஒன்றாகும். "தாழ்மையுடன் கேட்பது" என்று வெப்ஸ்டர்சின் அகராதி இந்த வார்த்தைக்கு அர்த்தம் கூறுகிறது. இது நாம் ஜெபிக்கும் கனிவான, உண்மையான ஜெபத்தோடு சம்பந்தம் உள்ளதாய் இருக்கிறது (பிலிப்பியர் 4:6).

### 3. பரிந்து பேசுதல் :

எபிரெயர் 7:25; 1 தீமோ. 2:1, இது சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட வார்த்தை. நீதிமன்றத்திலே ஒருவருக்கு சாதகமாக அல்லது ஒருவருக்கு விரோதமாக வாதாடுவதாகும்.

<u>குறிப்பு :</u>

ரோமர் 11:2,3, "எலியாவைக் குறித்து வேதம் சொல்லுகிறதை அறியீர்களா? . . . இஸ்ரவேலுக்கு விரோதமாக விண்ணப்பம் பண்ணினபோது" இது மற்றவர்களுக்காக தன்னுடைய ஜெபத்தைக் கேட்கும்படியாக ஆண்டவரை நாடுதல் ஆகும்.

ரோமர் 8:26–ல் பரிசுத்த ஆவியானவர் நமக்காக விண்ணப்பம் செய்கிறார். எபிரெயர் 7:25–ல் கிறிஸ்து நமக்காக விண்ணப்பம் செய்கிறார். எத்தனை மகத்துவமான சிலாக்கியம் நமக்கு இருக்கிறது. நாமும் மற்றவர்களுக்காக விண்ணப்பம் செய்யலாம்.

**4. ஸ்தோத்தரித்தல் :**

''இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள் . . . . எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்யுங்கள்'' (1 தெசலோனிக்கேயர் 5:17,18). பிலிப்பியர் 4:6–ல் ''நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் . . . உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.'' நம்முடைய நன்றியறிதலை வெளிப்படுத்துவதே நம்முடைய ஜெபத்தின் மிக முக்கிய பகுதியாகும்.

**5. வேண்டுதல் :**

அடிப்படையிலே, ஜெபம் என்பது வேண்டுதல் செய்து பதில் பெற்றுக் கொள்ளுதல் ஆகும். புதிய ஏற்பாட்டிலே வேண்டுதல் என்ற பதத்திற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தைக் குறித்துக்கொள்ளுங்கள்.

1. மத்தேயு 7:7,8 – ''கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் . . . கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான்.''
2. மத்தேயு 18:19 – ''உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப் போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் . . . அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.''
3. மத்தேயு 21:22 – ''நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்.''
4. லூக்கா 11:13 – ''. . . பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்.''
5. யோவான் 14:13,14 – ''என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ . . . அதைச் செய்வேன் . . . என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்.''
6. யோவான் 15:7 – ''. . . நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்.''
7. யோவான் 16:24 – ''இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை; கேளுங்கள் அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறை வாயிருக்கும்படி பெற்றுக் கொள்வீர்கள்.
8. யாக்கோபு 1:5,6 – ''உங்களில் ஒருவன் ஞானத்திலே குறைவுள்ளவனாயிருந்தால் . . . தேவனிடத்தில் கேட்கக் கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் . . . சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன். . .''
9. யாக்கோபு 4:2, 3 – ''. . . . நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே உங்களுக்குச் சித்திக்கிறதில்லை . . . நீங்கள் விண்ணப்பம்பண்ணியும் . . . . தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால் பெற்றுக் கொள்ளாமலிருக்கிறீர்கள்.''
10. 1 யோவான் 5:14 – ''. . . நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்கு செவி கொடுக்கிறார்.''

இதுபோன்ற அநேக குறிப்புகளை இன்னும் சொல்லமுடியும். ஆனால் வேண்டுதல் என்ற வார்த்தையின் முக்கியத்துவத்தை விளக்க இவைகள் போதும்.

## V. உங்களுடைய ஜெபங்களுக்கு பதில் பெறுவது எப்படி?

என்ன இரகசியம் இருக்கிறது? எந்த சாவி கதவை திறக்கச்செய்யும்? இயேசுவின் ஜெபத்தைக் கேட்டபின்பு அவருடைய சீடர்களில் ஒருவன், ''ஆண்டவரே, ஜெபிக்க எங்களுக்கு போதிக்க வேண்டும்'' என்றான் (லூக்கா 11:1). அப்படியென்றால் நாம் எல்லோரும் அதே வேண்டுதலை செய்ய வேண்டும்.

இதோ ஜெபத்தின் பதிலை பெறுவதற்காக வேதாகமம் கூறும் 11 வழிகள் அல்லது இரகசியங்கள் அல்லது சாவிகள் :

**1. நிலைத்திருந்து ஜெபியுங்கள் –** யோவான் 15:7

ஜெபத்திற்குரிய பதில் நாம் கிறிஸ்துவிலும், கிறிஸ்துவின் வார்த்தை நம்மிலும் நிலைத்திருப்பதைப் பொறுத்து இருக்கிறது. கிறிஸ்துவில் வாசம்செய்யுங்கள், அவருடைய வார்த்தை உங்களில் வாசம்செய்யட்டும்.

**2. கீழ்ப்படிந்து ஜெபியுங்கள் –** 1 யோவான் 3:22

ஜெபத்திற்குரிய பதில், தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு அவருடைய பார்வைக்குப் பிரியமாக நடந்து கொள்வதைப் பொறுத்து இருக்கிறது.

**3. கரிசனையோடு ஜெபியுங்கள் –** எபிரெயர் 5:7

கிறிஸ்துவினுடைய ஜெபம் கேட்கப்பட்டதன் காரணம் அவர் பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணினார். ஆண்டவர் கண்ணீர் விட்டு ஜெபித்தது போல நாமும் கண்ணீர்விட்டு ஜெபிக்க உதவி செய்வாராக.

**4. விடாப்பிடியாக ஜெபியுங்கள் –** லூக்கா **11:5–8**

இந்த உவமையில் உள்ள நண்பர் தனக்குத் தேவையான அப்பத்தை பெற்றதற்கு காரணம் அவனுடைய விடாப்பிடியினாலேயே. அவன் தொடர்ந்து கதவைத் தட்டினான். அவன் இல்லை என்ற பதிலை ஏற்க மறுத்துவிட்டான். அவன் விடாப்பிடியாக ஜெபித்ததினாலே பெற்றுக்கொண்டான்.

**5. இடைவிடாமல் ஜெபியுங்கள் – 1** தெசலோனிக்கேயர் **5:17**, எபேசியர் **6:18**, லூக்கா **18:1**

வல்லமையுள்ள ஜெபம் தேவனுடைய ஆசீர்வாதத்திற்காக இருதயத்திலிருந்து இடைவிடாமல் ஏறெடுக்கப்படும் கதறல் ஆகும்.

**6. இயேசுவின் நாமத்தினாலே ஜெபியுங்கள் –** யோவான் **14:13, 14**

இயேசுவின் நாமத்திலே ஜெபிக்கும்படியாக நாம் மறுபடியும் மறுபடியும் கட்டளை பெற்றிருக்கிறோம். எத்தனை அதிகமான வல்லமை இருக்கிறது அந்த அதிசய நாமத்திலே!

**7. விசுவாசத்தோடு ஜெபியுங்கள் –** மாற்கு **11:24**, மத்தேயு **21:22**, யாக்கோபு **1:6**

எதற்கு தேவனை நாம் விசுவாசிக்கிறோமோ அதை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளுகிறோம். இருதயத்தை சந்தேகம் நிறைக்கும்பொழுது மலையை பெயர்ந்து போகச் செய்ய முடியாது. நீ ஜெபிக்கும்போது விசுவாசி.

**8. ஊக்கத்தோடு ஜெபியுங்கள் –** யாக்கோபு **5:16, 17**

எலியா ஊக்கத்தோடு ஜெபித்ததினால் மூன்று வருடமும் ஆறு மாதமும் மழை பெய்யவில்லை. இப்படிப்பட்ட கருத்துள்ள ஜெபம் வல்லமை உள்ளது. தேவன் நம்மை அன்பில்லாத உலர்ந்த கண்களை உடைய ஜெபத்தினின்று காப்பாராக!

**9. தைரியத்தோடு ஜெபியுங்கள் –** எபிரெயர் **4:16**

நம்முடைய இருதயம் நம்மை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருந்தால் நாம் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருந்து (1 யோவான் 3:21) கிருபாசனத்தண்டையில் தைரியமாய் சேருகிறோம். கிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டிருக்கிறோம். கிறிஸ்துவின் நீதியை அணிந்திருக்கிறோம். இயேசுவின் நாமத்திலே தேவனிடத்தில் சேருகிறோம். நாம் தைரியமாய் இருப்பதற்கு இவைகளைவிட வேறு என்ன தேவை?

**10. தேவனுடைய சித்தத்தின்படி ஜெபியுங்கள் – 1** யோவான் **5:14**

தேவனுடைய சித்தத்திற்கும் நோக்கத்திற்கும் ஒத்த ஜெபமே பலனைக் கொண்டுவருகிற ஜெபம். தேவன், எந்த ஜெபம் அவருக்கு மகிமையையும் கனத்தையும் கொண்டு வருகிறதோ அந்த ஜெபத்தைக் கேட்டு பதில் அளிக்கிறார்.

**11. ஆவியோடு ஜெபியுங்கள் –** எபேசியர் **6:18**

பரிசுத்த ஆவியானவர் ஜெபிக்கிற ஜெபத்திற்கு பிதாவாகிய தேவன் பதில் அளிக்கிறார். ஆவியானவரின் கட்டுப்பாட்டிற்கு உங்களை முழுமையாக ஒப்புக்கொடுங்கள். அவர் எப்படி ஜெபிக்கவேண்டும்? என்ன ஜெபிக்கவேண்டும்? என்று உங்களுக்குக் கற்றுக்கொடுப்பார்.

## VI. ஜெபத்திற்கான தடைகள் அல்லது ஏன் பல ஆயிரக்கணக்கான ஜெபங்களுக்கு பதில் இல்லாமல் இருக்கிறது?

**1. நேர்மையில்லாத நோக்கம் –** யாக்கோபு **4:3**

“நீங்கள் விண்ணப்பம்பண்ணியும் உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டும் என்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால் பெற்றுக் கொள்ளாமாலிருக்கிறீர்கள்.” பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் சொந்த இச்சைகளுக்காகவும், தங்கள் சொந்த மனநிறைவுக்காகவும் பலவற்றை தேவனிடத்தில் கேட்கிறார்கள். அநேகமான ஜெபங்கள் தன்னலம் உள்ளதாக இருக்கிறது. நீங்கள் ஜெபிப்பதற்கு முன்பு உங்கள் முழுமையான விருப்பம் தேவனுடைய சித்தத்திற்கு உட்பட்டதா என்றும், தேவனுக்கு மகிமையை கொண்டுவருகிறதா என்றும் உறுதிப்படுத்திக் கொள்வது நல்லது.

**2. இருதயத்தில் சந்தேகம் –** மாற்கு **11:23**

“எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து, நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டு போ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும்.” அநேக ஜெபங்கள் பயத்தினாலும் சந்தேகத்தினாலும் தடைசெய்யப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிறது. ஜெபித்தால் மட்டும் போதாது, நாம் விசுவாசிக்க வேண்டும் (மத்தேயு 21:22). சந்தேகப்படுகிறவன் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாம் என்று நினையாதிருப்பானாக (யாக்கோபு 1:6,7).

**3. வாழ்க்கையில் பாவம் –** சங்கீதம் 66:18

என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்கு செவிகொடார். ஏசாயா 1:15, ". . . நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது."

தேவன் எல்லா ஜெபங்களையும் கேட்டு பதில் அளிக்கிறார் என்று சிலர் போதிக்கிறார்கள். இருதயத்திலே பாவம் இருக்குமேயானால் தேவன் ஜெபத்திற்கு பதில் கொடுக்கமாட்டார் என்பது மட்டும் அல்ல, அவர் அந்த ஜெபங்களை தன் காதுகளினால் கேட்கவும் மாட்டார் என்று வேதாகமம் கூறுகிறது.

**4. தேவனுடைய சித்தத்தை முழுவதும் புறக்கணித்தல் :**

1 யோவான் 5:14, "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவிகொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்." நாம் எப்பொழுதெல்லாம் ஆவியிலே ஜெபிக்கிறோமோ அப்பொழுது ஆவியானவர் நமக்காக தேவனுடைய சித்தத்தின்படியே வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:27). தேவனுடைய சமுகத்தில் கவனம் இல்லாமல் தன்னல நோக்கத்தோடுகூட அவசரமாக, புத்தியில்லாமல் ஏறெடுக்கப்படும் ஜெபங்களுக்கு பதில் அளிக்கப்பட மாட்டாது. எல்லா ஜெபங்களும் தேவனுடைய சித்தத்திற்கும், நோக்கத்திற்கும் இசைந்ததாய் இருக்க வேண்டும். நம்முடைய ஆண்டவர் கெத்செமனே தோட்டத்தில் கதறினது ஒரு அருமையான உதாரணமாகும். "ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக்கா 22:42).

**5. தேவனுடைய கட்டளைக்கு கீழ்படியாமை :**

1 யோவான் 3:22, "அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாக பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக்கொள்ளுகிற தெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம்."

யோவான், கற்பனை என்று கூறும்பொழுது தேவனுடைய வசனத்தையும் அந்த வசனத்திலே வெளிப்படுத்தப் பட்டிருக்கிற அவருடைய சித்தத்தையுமே குறிப்பிடுகிறார். 1 யோவான் 2:3–5ஐ வாசித்துப் பாருங்கள். உங்களுடைய ஜெபத்திற்கு பதிலைப் பெறவேண்டும் என்றால் தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற தேவனுடைய சித்தத்திற்கு உங்களை அர்ப்பணித்து, அவரைப் பிரியப்படுத்தக்கூடிய காரியத்தை மட்டுமே செய்யக் கருத்தாய் இருங்கள்.

## VII. ஜெபத்தின் அற்புதமான வல்லமை :

கீழே கொடுக்கப்பட்டிருக்கிற வழிகளில் ஜெபத்தின் அற்புதமான வல்லமையைக் காணலாம்.

**முதலாவது – தேவன் ஜெபத்தைக் கேட்டு பதில் அளிக்கிறார் என்ற உண்மையில் இருந்து :**

1. சங்கீதம் 65:2 – "ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்."
2. ஏசாயா 65:24 – "அவர்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே நான் மறு உத்தரவு கொடுப்பேன். . . பேசும்போதே நான் கேட்பேன்."
3. எரேமியா 33:3 – "என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமாகிய பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்."
4. 2 நாளாகமம் 7:14 – "என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்."
5. 1 பேதுரு 3:12 – "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாய் இருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாய் இருக்கிறது . . ."

**இரண்டாவது – நாம் ஜெபம் செய்தால் பெரிய காரியங்கள் வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது :**

1. மாற்கு 11:24 – "நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாயிருக்கும்."
2. மத்தேயு 18:19 – "உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்."
3. யோவான் 14:14 – "என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்."
4. மத்தேயு 21:22 – "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்."
5. யாக்கோபு 5:16 – ". . . நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது."

**மூன்றாவது – வேதாகமம் ஜெபத்தின் வல்லமையை நடத்திக் காண்பித்திருக்கிற பல நிகழ்ச்சிகளை உடையதாய் இருக்கிறது.**

1. யோசுவா ஜெபித்தான், சூரியன் நடுவானத்தில் தரித்து நின்றது (யோசுவா 10:12–14).

2. யாக்கோபு ஜெபத்திலே தேவனோடு போராடினான். அவனுடைய ஜீவன் காக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டு, மாற்றப்பட்டான் (ஆதியாகமம் 32:25–28).
3. மோசே ஜெபித்து தேவனுடைய கரம் இஸ்ரவேலருக்கு விரோதமாக எழாதபடி செய்தான் (யாத்திராகமம் 32:9–14).
4. எலியா ஜெபம்பண்ணினான், அக்கினி வானத்திலிருந்து இறங்கியது (1 இராஜாக்கள் 18:36–38).
5. அன்னாள் ஜெபித்தாள், மலடியானவள் குணம் பெற்று சாமுவேல் பிறந்தான் (1 சாமுவேல் 1:9–20).
6. தானியேல் ஜெபித்தான், ஆண்டவர் சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டார் (தானியேல் 6:10–22).
7. எசேக்கியா ராஜா ஜெபம்பண்ணினான், அவனுடைய ஆயுசு நாளில் 15 வருடத்தை தேவன் கூட்டினார் (2 இராஜாக்கள் 20:1–6).
8. தேவனுடைய சபை ஜெபித்தது, தேவன் அவர்கள் கூடியிருந்த இடத்தை அசைத்து அவர்களை பரிசுத்த ஆவியினால் நிரப்பினார் (அப்போஸ்தல் 4:31).
9. தேவனுடைய சபை ஜெபித்தது, பேதுரு அதிசயவிதமாக அவனுடைய கட்டுகளிலிருந்தும், சிறையிலிருந்தும் விடுவிக்கப்பட்டான் (அப்போஸ்தலர் 12:5–11).
10. பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணினர், தேவன் அவர்கள் இருந்த சிறைச்சாலையை பூமி அதிர்ச்சியினால் அசைத்தார் (அப்போஸ்தலர் 16:25, 26).

இதைப்போன்ற அநேக உதாரணங்களை வேதாகமத்தில் தேடிப்பாருங்கள்.

**முடிவுரை :**

இந்தப் பாடத்திலிருந்து பின்வரும் முடிவுரைகளைக் கூறலாம் என்று நம்புகிறேன்.

1. ஜெபம் மிக முக்கியமான ஒன்றாகும். நிலைநிறுத்துகிற கிருபையையும், கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தையும், ஆவியானவரின் வல்லமையையும் ஜெபம் இல்லாமல் அனுபவிக்க முடியாது.
2. தேவன் ஜெபத்தைக் கேட்டு பதில் கொடுக்கிறார், ஆகையால் அதன் மதிப்பை அளவிட முடியாது.
3. ஜெபம் 'கட்டளை' ஆனபடியால் அதைப்பற்றி ஏனோதானோ என்று இருக்க இடமில்லை.
4. நொறுங்குண்டதும் கீழ்படிதலுமான இருதயத்திலிருந்து ஆவியினாலே விசுவாசத்துடன் ஏறெடுக்கப்படும் ஜெபமானது வல்லமையுள்ளதாயும், பலன் கொடுக்கிறதாயும் இருக்கிறது.
5. நம்முடைய நோக்கம் உத்தமமாய் இராதபோதும், நம்முடைய இருதயம் சந்தேகத்தினால் நிறைந்திருக்கும்போதும், தேவனுக்கு விரோதமான பாவம் பேணி வைக்கப்படும்போதும், தேவனுடைய சித்தம் புறக்கணிக்கப்படும்போதும் நம்முடைய ஜெபங்கள் கேட்கப்படாமல் இருக்கும்.
6. ஜெபிக்காமை பாவமாகும். இது தேவனுடைய கரத்தைக் கட்டுகிறது. சபையின் ஆசீர்வாதத்தை திருடி ஆத்துமாக்களை வறுமையில் கொண்டுபோய் விடுகிறது.
7. ஜெபம் சூரியனை தன்னுடைய பாதையில் ஓடுவதை நிறுத்தமுடியுமானால், வானத்திலிருந்து அக்கினியை இறக்க முடியுமானால், சிங்கங்களின் வாயைக் கட்ட முடியுமானால் ஜெபம் வல்லமையுள்ளதாகும்.

இந்த வல்லமை இன்றைய தேவனுடைய சபைகளிலே காணப்படாத ஒன்றாக இருக்கிறது. இதனால் நாம் எல்லோரும் ஜெபத்திற்கு நம்மை அர்ப்பணித்து தேவனுடைய மகிமையான முழு ஆசீர்வாதத்தையும் கேட்போமாக.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்கும் முன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# ஜெபம்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

## சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்

1. விசுவாசிகளுக்கு :
   a. ஜெபமானது விசுவாசிகளின் விருப்பத்திற்கு விடப்பட்டிருக்கிறது
   b. ஜெபமானது தேவனால் கட்டளையிடப்பட்டிருக்கிறது
   c. ஜெபம் தவிர்க்கப்பட்டாலும் பரவாயில்லை
2. ஜெபம் என்றால் என்ன ?
   a. தேவனுக்கும் விசுவாசிக்கும் இடையேயுள்ள தொடர்பு
   b. வேத வசனத்தை வாசிப்பது
   c. முழங்காலில் நிற்பதாகும்
3. ஏசாயா 65:24–ம் வசனம் ஜெபத்தின் வல்லமையைக் குறித்து கூறுவது என்ன ?
   a. தேவன் நமது ஜெபத்திற்கு ஆம் என்று பதில் கொடுக்கலாம்
   b. சில நேரங்களில், நமது ஜெபத்திற்குத் தேவன் இல்லை என்று பதில் கொடுக்கலாம்
   c. தேவன் சில நேரங்களில், நாம் ஜெபிப்பதற்கு முன்பே பதில் கொடுத்துவிடுகிறார்
4. 2 நாளாகமம் 7:14–ன் படி, ஒரு விசுவாசி தான் ஜெபிக்கும்பொழுது எவ்வித எண்ணம் கொண்டிருக்க வேண்டும் ?
   a. தாழ்மையாக இருக்க வேண்டும்
   b. பெருமையாக இருக்க வேண்டும்
   c. தேவனுக்குப் பயப்பட வேண்டும்
5. **பொருத்துக :–** கொடுக்கப்பட்டிருக்கும் வார்த்தைக்கு முன்பு சரியான விளக்கத்தை எடுத்து எழுதவும்.

| | | |
|---|---|---|
| -------------------------- | தொழுகை | a. தேவனுக்கு நமது நன்றியைத் தெரிவிப்பது |
| -------------------------- | விண்ணப்பம் | b. பிறருக்காக மன்றாடுவது |
| -------------------------- | வேண்டுதல் | c. நமது தேவைகளைச் சொல்வது |
| -------------------------- | நன்றி சொல்லுதல் | d. தேவனுக்கு நமது அன்பை தெரிவிப்பது |

6. நாம் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று கீழே உள்ள வசனங்கள் கூறுகிறது ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)
   a. ஏசாயா 55:6 ----------------------------------------------------------
   b. 2 நாளாகமம் 7:14 ----------------------------------------------------------
   c. லூக்கா 18:1 ----------------------------------------------------------
   d. 1 தெசலோனிக்கேயர் 5:17 ----------------------------------------------------------
   e. யாக்கோபு 4:2 ----------------------------------------------------------

7. உங்களின் ஜெபத்திற்கானப் பதிலைப் பெறுவதற்கு 7 சாவிகளை வேதவசனத்துடன் வரிசைப்படுத்தவும்.

a. ------------------------------------------------------------------------
b. ------------------------------------------------------------------------
c. ------------------------------------------------------------------------
d. ------------------------------------------------------------------------
e. ------------------------------------------------------------------------
f. ------------------------------------------------------------------------
g. ------------------------------------------------------------------------

8. **நிரப்புக :–** ஒரு விசுவாசி பிறருக்காக ஜெபிக்காமல் இருப்பது ------------------ (1 சாமுவேல் 12:23).

9. அநேக மக்களின் ஜெபங்களுக்குப் பதில் கிடைப்பதில்லை ஏன் ? என்பதை வேதவசனத்துடன் எழுதுக.

a. ------------------------------------------------------------------------
b. ------------------------------------------------------------------------
c. ------------------------------------------------------------------------
d. ------------------------------------------------------------------------
e. ------------------------------------------------------------------------

10. ஜெபிக்கத் தவறுவதைக் குறித்து கீழே உள்ள வசனங்கள் சொல்வது என்ன ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)

a. மாற்கு 11:23,24 ------------------------------------------------------
b. 1 தீமோத்தேயு 2:1 ------------------------------------------------------
c. யாக்கோபு 4:2 ------------------------------------------------------
d. எபேசியர் 6:18 ------------------------------------------------------
e. 1 சாமுவேல் 12:23 ------------------------------------------------------

11. ஏதாவது ஒரு முறை சிறப்பான விதத்தில் உங்களின் ஜெபத்திற்குத் தேவன் பதில் கொடுத்ததைக் குறித்து **தனித்தாளில்** எழுதவும்.

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ________________________________________________

**முகவரி :** ________________________________________________

________________________________________________